# காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கேவுக்கு பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஜூலை. 22-

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு நேற்று (21.7.2025) பிறந்தநாள்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

**இந்தியாவை வலுப்படுத்துவதில் மல்லிகார்ஜூன கார்கே முக்கிய பங்கு வகிக்கிறார். பிரிவினையை விதைக்க முயலும் சக்திகளுக்கு எதிராக உறுதியாக நிற்கும் தலைவர்** என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.7.2025) மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் சந்தித்து, மயிலாடுதுறையில் 16.7.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில், மீனவர்களின் நலனிற்காக தரங்கம்பாடி வட்டத்தில் இருக்கும் தாழம்பேட்டை மற்றும் வெள்ளக்கோயில் கிராமங்களில் கடற்கரையோர கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும், திருமுல்லை வாசல், மீனரங்கதரத்தில் மேல் கல்சுவர், நீட்டிப்பு மற்றும் தூர்வாருதல் பணி மேற்கொள்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும், பூம்புகார் மீன்பிடி துறைமுகத்தில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும் போன்ற பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா எம். முருகன், மு. பன்னீர்செல்வம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் அவர்கள் சந்தித்து பேசினார். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கனகராஜ், மாநில குழு உறுப்பினர் ஆறுமுக நயினார் ஆகியோர் உள்ளனர்.

### மும்மொழிக் கொள்கை அமல்:

# மாநில அரசுகளே முடிவு செய்யலாம்!

## ஒன்றிய அரசு பின் வாங்கியது!

புதுடெல்லி, ஜூலை. 22-

மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவதை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே முடிவு செய்து கொள்ளலாம் என ஒன்றிய அரசு பின்வாங்கி உள்ளது.

மக்களவையில், காங்கிரஸ் கொறடா மாணிக்கம் தாகூர் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய கல்வித்துறை இணையமைச்சர் ஜெயந்த் சவுத்ரி எழுத்து மூலம் பதிலளித்தார்.

அதில், கல்வி ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ளதால், மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவதை அந்தந்த மாநில அரசுகள் நெகிழ்வான முறையில் முடிவு செய்ய வேண்டும் என்றும், மாநிலத்தின் தேவை, பன்முகத்தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு இதனை அமல்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மும்மொழிக்கொள்கையை அமல்படுத்த தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், ஒன்றிய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## இன்று முதல் 6 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை,ஜூலை.22-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (22.07.2025) திருவொற்றியூர் மண்டலம், வார்டு-2ல் குன்னூார் நெடுஞ்சாலை, எண்ணூார் வியாபாரிகள் சங்கம், இராயபுரம் மண்டலம், வார்டு-54ல் வால்டாக்ஸ் சாலை, பத்மநாப திரையரங்கம் அருகில் உள்ள ஜே.கே. கன்வென்சன் அரங்கம், அண்ணாநகர் மண்டலம், வார்டு-95ல் வில்லிவாக்கம், எம்.டி.எச். சாலை, டி.கே.ஏ. திருமண மண்டபம், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-138ல் எம்.ஜி.ஆர். நகர், பச்சையப்பன் பிரதான சாலை, அஞ்சலி மஹால், அடையாறு மண்டலம், வார்டு-169ல் சைதாப்பேட்டை, எல்.டி.ஜி. சாலை, சமூகநலக் கூடம், பெருங்குடி மண்டலம், வார்டு-181, கொட்டிவாக்கம், ஏ.ஜி.எஸ். காலனி, 2வது பிரதான சாலை, ஏ.ஜி.எஸ். சமூக நலக் கூடம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொது மக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில்

# தீண்டாமை உள்ளிட்ட பாகுபாடுகளைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 22-

ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் நிலவும் தீண்டாமை உள்ளிட்ட பாகுபாடுகள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேற்று (21-07-2025) எழுத்துப் பூர்வமான கேள்விகளை எழுப்பினார்.

“உயர் கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில், யு.ஜி.சி. விதிமுறைகள் 2012 இன் படி ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் Equal Opportunity Cells எனப்படும் சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அத்தகைய பிரிவுகளை உருவாக்கிய மத்திய பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை விவரங்கள் என்ன? இல்லையென்றால், சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப்படாததற்கான காரணங்கள் என்ன?

ஒன்றிய அரசின் கல்லூரிபல்கலைக்கழக வளாகங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடு காட்டப்பட்ட சம்பவங்கள் குறித்த தரவுகளை அரசாங்கம் பராமரிக்கிறதா?

அப்படியானால், கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக்கழகங்களில் நடந்த இத்தகைய சம்பவங்களின் விவரங்கள், கல்லூரி வாரியாக/பல்கலைக் கழக வாரியாக எத்தனை? தரவுகள் இல்லையென்றால், அதற்கான காரணங்ள் என்ன?

பாகுபாடுகளை எதிர்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் அல்லது அரசு வழங்கிய உதவிகள் என்ன?

சாதி அடிப்படையிலான பாகுபாட்டால் எழும் குறைகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசாங்கம் ஏதேனும் கூடுதல் வழிமுறைகளை வகுக்க, திட்டமிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?”

ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார்.

**ஒன்றிய கல்வி அமைச்சர் பதில்!**

இக்கேள்விகளுக்கு ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் இணையமைச்சரான டாக்டர் சுகந்தா மஜூம்தர் அளித்துள்ள பதில் வருமாறு :-

“ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்துக்கு உட்பட்ட 48 மத்திய பல்கலைக் கழகங்களிலும் மாணவர்களிடையே சமத்துவத்தை உறுதிப்படுத்துகிற Equal Opportunity Cells எனப்படுகிற சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய பல்கலைக்கழகங்கள், நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்ட சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட சட்டப்பூர்வ தன்னாட்சி அமைப்புகளாகும்.

மேலும் அந்தந்த பல்கலைக் கழகங்கள் அவற்றுக்கென உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

ஒன்றிய கல்வி அமைச்சகமும், யுஜிசியும் உயர் கல்வி நிறுவனங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டைத் தடுக்கவும், பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மத்திய பல்கலைக் கழகங்களில் பாரபட்சம், பாகுபாடு உள்ளிட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை தடுக்க கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி வலைத்தளங்கள் அல்லது புகார் பதிவேடுகள் மூலம் புகார்களை பதிவு செய்வதற்கான வழிமுறைகளை நிறுவப்பட்டுள்ளன.

SC/ST/OBC மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களிடமிருந்து பெறப்படும் பாகுபாடு குறித்த புகார்களில், தவறு செய்யும் நபர்கள் மீது உடனடி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர் குறை தீர்க்கும் குழுக்களை (SGRCs) அமைத்தல் மற்றும் குறை தீர்ப்பு அதிகாரிகளை நியமித்தல், சம வாய்ப்பு குழுக்களை நிறுவுதல், மாணவர்களுக்கு கவுன்சிலிங் மையங்கள் மூலம் ஆலோசனை வழங்குதல் ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

மேலும் உயர் கல்வி நிறுவனங்களில் ராகிங் மற்றும் பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன”.

இவ்வாறு ஒன்றிய கல்வித் துறை இணையமைச்சர் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் உள்ள

# பல்வேறு துறைகள் பயன்படுத்தும் வகையில் செந்தர விலைப் பட்டியல்!

## அமைச்சர் எ.வ.வேலு வெளியிட்டார்!

சென்னை, ஜூலை.22-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (21.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் தயாரிக்கப்பட்ட 2025-26 ஆம் ஆண்டிற்கான செந்தர விலைப் பட்டியலினை வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் பயன்படுத்தும் வகையில், 2025-26ஆம் ஆண்டிற்கான செந்தர விலைப் பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட செந்தர விலைப்பட்டியல் குழு அமைக்க 14.3.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

- முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து.,
- முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து.,
- முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை
- முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர், வனத்துறை
- நிதித்துறையை சார்ந்த உறுப்பினர்
- பொறியியல் இயக்குநர்,தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
- பொறியியல் இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம்
- தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத்துறை
- தலைமைப் பொறியாளர், நீ.வ.து., வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்
- தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம்
- தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

மேற்கண்ட குழு உறுப்பினர்கள் பல்வேறு மட்டத்தில் கட்டுமான பொருட்கள், மற்றும் இதர இனங்களின் விலைகள் குறித்து பல்வேறு தரவுகளின் அடிப்படையில் விவாதித்து விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இது 3 தொகுதிகளாக தயாரிக்கப்பட்டுள்ளது.

தொகுதி 1: பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் நீர்வளத்துறை

தொகுதி 2 : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை.

தொகுதி 3 : வனத்துறை, தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் இந்த செந்தர விலைப் பட்டியலை அரசுத் துறைகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நீர்வளத்துறை அரசுச் செயலாளர், ஜெ.ஜெயகாந்தன், நிதித்துறை இணைச் செயலாளர் பிரதீக் தயாள், நிதித்துறை துணைச் செயலாளர் சி.ஏ. ரிஷப் பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ச.மணிவண்ணன், நெடுஞ்சாலைத்துறை தலைமை இயக்குநர் ஆர். செல்வதுரை மற்றும் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (21.7.2025) சென்னை இராயப்பேட்டையில் அதிநவீன எம்.ஆர்.ஐ இயந்திரத்துடன் அமைக்கப்பட்டுள்ள சன்ரே ஸ்கேன்ஸ் பரிசோதனை மையம் மற்றும் ஆர்த்தோமெட் பன்னோக்கு மருத்துவமனையின் கார்டியா இதய நோய் சிகிச்சை மையத்தையும் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநிலச் செயலாளரும், மருத்துவமனையின் மேலாண்மை இயக்குநருமான மருத்துவர் அ.சுபேர்கான், மருத்துவமனையின் தலைமை நிர்வாக அலுவலர் திருமதி ரெஹானா கான், மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (21.7.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் தயாரிக்கப்பட்ட 2025–26 ஆம் ஆண்டிற்கான செந்தர விலைப் பட்டியலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நீர்வளத்துறை அரசுச் செயலாளர், ஜெ.ஜெயகாந்தன், நிதித்துறை இணைச் செயலாளர் பிரதீக் தயாள் நிதித்துறை துணைச் செயலாளர் சி.ஏ. ரிஷப் பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ச.மணிவண்ணன், நெடுஞ்சாலைத்துறை தலைமை இயக்குநர் ஆர்.செல்வதுரை மற்றும் நெடுஞ்சாலைத்துறை/ பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.